# மெட்ரோ ரயிலில் இலவசம்: 4 நாளில் 7.34 லட்சம் பேர் பயணம்

சென்னை, பிப்.14: சென்னை மெட்ரோ ரயிலில் பொதுமக்கள் இலவசமாகப் பயணிக்க அனுமதிக்கப்பட்ட நிலையில், பிப்ரவரி 10 ஆம் தேதி முதல் பிப்ரவரி 13 ஆம் தேதி வரை 4 நாள்களில் 7 லட்சத்து 34,379 பேர் பயணம் செய்துள்ளனர்.

ஏஜி.டி.எம்.எஸ்-வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் சேவை கடந்த ஞாயிற்றுக்கிழமை (பிப். 10) தொடங்கியது. இதையடுத்து, வண்ணாரப்பேட்டை-விமானநிலையம் வரையிலான முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல்-பரங்கிமலை வரையிலான இரண்டாவது வழித்தடத்திலும் மெட்ரோ ரயில் போக்குவரத்து முழுமையடைந்தது. மெட்ரோ ரயில் சேவையை பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில், மெட்ரோ ரயில் இயக்கப்படும் எல்லா வழித்தடத்திலும் பொதுமக்கள் கடந்த 10-ஆம் தேதி பிற்பகல் முதல் இலவசமாகப் பயணிக்க மெட்ரோ ரயில் நிர்வாகம் அனுமதித்தது. இதையடுத்து, மெட்ரோ ரயில் நிலையங்களில் கடந்த 10 ஆம் தேதி மாலை முதல் மக்கள் வருகை அதிகரிக்கத் தொடங்கியது.



மெட்ரோ ரயிலில் பயணிப்பதற்காக கடந்த 11 ஆம் தேதி அன்று மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு அதிக அளவில் மக்கள் வந்தனர். இதன்பிறகு, கடந்த செவ்வாய்க்கிழமை(பிப்.12), புதன்கிழமை(13) ஆகிய தேதிகளில் மேலும் மக்கள் வரத்து அதிகரித்தது. காலை முதல் இரவு வரை மெட்ரோ ரயில்களில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. குறிப்பாக, செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை ஆகிய நாள்களில் கட்டுக்கடங்காத அளவில் மக்கள் வந்து, இலவச பயணம் மேற்கொண்டு மகிழ்ந்தனர். மெட்ரோ ரயில்நிலையங்களில் உள்பகுதியிலும், வெளிப்பகுதியிலும் செய்யப்பட்டுள்ள வசதிகளைக் கண்டு வியந்து பாராட்டினர். புதன்கிழமை இரவுடன் இலவசப் பயணம் முடிவுக்கு வந்தது. மெட்ரோ ரயிலில் வியாழக்கிழமை முதல் கட்டணப் பயணம் தொடங்கியது.

இந்நிலையில், மெட்ரோ ரயிலில் இலவசப் பயணத்துக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த 10-ஆம் தேதி முதல் கடந்த 14-ஆம் தேதி வரை 7 லட்சத்து 34,379 பேர் பயணம் செய்துள்ளனர். மெட்ரோ ரயிலில் இலவசப் பயணத்தை பொருத்தவரை, பிப்ரவரி 10-ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) அன்று 69,000 பேரும், திங்கள்கிழமை (பிப்.11) அன்று 2 லட்சத்து 1,556 பேரும் ,செவ்வாய்க்கிழமை(பிப்.12) அன்று 2 லட்சத்து 10,792 பேரும், புதன்கிழமை(பிப்.13) அன்று 2 லட்சத்து 53,031 பேரும் என்று மொத்தம் 7 லட்சத்து 34,379 பேரும் பயணம் செய்துள்ளனர்.

இது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரி ஒருவர் கூறியது:

இதை பொதுமக்கள் இலவசப் பயணமாக பார்த்தாலும் , எங்களைப் பொருத்தவரை சோதனையாகத் தான் பார்க்கப்பட்டது. எங்களின் தரத்தை மக்கள் தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்தது. மெட்ரோ ரயிலில் பயணம் செய்த மக்கள் மெட்ரோ ரயில் தரத்தைப் பாராட்டியுள்ளனர். மெட்ரோ ரயில் போக்குவரத்துக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது என்றார் அவர்.